4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **168/2023** நாள்: **11.08.2025** வா.சா.1 – சதீஷ்குமார்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

பிரதிவாதி என்னிடம் ரூ.15 லட்சம் கடன் வாங்கியது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் மேற்படி கடனுக்கு கடனுறுதி சீட்டு தவிர வேறு எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை. பிரதிவாதிக்கு ரூ.15 லட்சம் கடன் வாங்குவதற்கு அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு ராஜேந்திரன் மற்றும் கதிரேசன் மூலம் தெரியும் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதியிடமிருந்து எழுதி வாங்கியதாக சொல்லப்படும் கடனுறுதி சீட்டில் மேற்படி ராஜேந்திரன், கதிரேசன் ஆகியோரிடம் சாட்சி கையொப்பம் எதுவும் எழுதி வாங்கவில்லை. மேற்படி பிரதிவாதியிடம் கடன் வாங்கியதாக நான் மேற்படி ராஜேந்திரன், கதிரேசனிடம் தெரிவித்ததாக நான் என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை. பிரதிவாதி கடன் வாங்கிய விவரத்தை மேற்படி இரு நபர்களிடம் வழக்கு தாக்கல் செய்த பின் சொன்னேன். நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு மேற்படி நபர்களிடம் சொன்னேன் என்ற விவரத்தை என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் கடன் கொடுத்த பணத்தை பிரதிவாதியிடம் நேரடியாக பலமுறை கேட்டேன். எந்தந்த தேதியில் எங்கு வைத்து கேட்டேன் என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. பிரதிவாதி என்னிடம் நான் சொல்வது போல் ரூ.15 லட்சம் கடன் வாங்கியிருந்தால் நான் கடனுறுதி சீட்டு எழுதி வாங்கியிருக்க மாட்டேன் என்றும், சொத்து சம்பந்தமாக எழுதி வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை, பிரதிவாதிக்கு

என்னை தெரியவே தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூ.15 லட்சம் கடன் வாங்கியதாக நான் கடனுறுதி சீட்டு பொய்யாக எனக்கு வேண்டியவர்களை வைத்து தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பம் என்று சொல்லப்படும் கைரேகையும், கையொப்பமும், பிரதிவாதிக்கு உரியவை அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆங்கிலத்தில் கையொப்பம் போடும் பழக்கமுடையவர் என்றும், கடனுறுதி சீட்டில் தமிழில் கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றும், எனவே அது பிரதிவாதி கையொப்பமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு வேண்டப்பட்டவர்களின் தூண்டுதலின் பேரில் கடன் வாங்கியதாக கடனுறுதி சீட்டு பொய்யாக தயார் செய்து வழக்கு பொய்யாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதி அனுப்பிய பின்னர் என்னை யார் என்று பிரதிவாதி அறிந்து கொள்வதற்கு முன்பாகவே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டை கண்ணன் என்ற பத்திர எழுத்தர் எழுதினார். மேற்படி கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் முத்து ராமசந்திர மூர்த்தி, கண்ணன் ஆகியோர்கள் கையொப்பம் போட்டுள்ளார்கள். கடனுறுதி சீட்டு எந்த நிற மையினால் எழுதப்பட்டது என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. கடனுறுதி சீட்டில் முதலில் கையொப்பம் போட்டது முத்து ராமசந்திர மூர்த்தி அதன்பிறகு கண்ணன் கையொப்பம் போட்டார். அதன் பிறகு முத்து ராயப்பன் கையொப்பம் போட்டார். யார் யார் எந்தந்த மை நிற பேனாவால் கையொப்பம் போட்டார்கள் என்றால் சாட்சி ஒரே பேனாவில் தான் அனைவரும் கையொப்பம் போட்டதாக கூறுகிறார். முத்து ராமசந்திர மூர்த்தி அவருடைய கையொப்பத்தை அவரே போட்டு, அவருடைய முகவரியையும் பெயரையும் எழுதினார் என்று சொன்னால் சரிதான். கண்ணன் எழுதிய பேனாவிலேயே மேற்படி நபர் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் எழுதப்பட்டுள்ள மையின் நிறத்திற்கும், முத்து ராமசந்திர மூர்த்தி எழுதிய கையொப்பத்தில் உள்ள மையின் நிறத்திற்கும்

வேறுபாடுகள் உள்ளன என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் முத்து ராமசந்திர மூர்த்தியின் பெயர் இல்லை, கையொப்பம் மட்டும் உள்ளது. மேற்படி முத்து ராமசந்திர மூர்த்தியின் முகவரி முதலில் பென்சிலால் எழுதப்பட்டு அதற்கு மேல் பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பென்சிலால் எழுதப்பட்டு அதற்கு மேல் பேனாவால் முகவரி எழுதப்பட்டுள்ளது என்றும் நான் உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமும், கைரேகையும், பிரதிவாதியின் கையொப்பமும், கைரேகையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கரூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், அங்கிருந்து வந்து என்னிடம் கடன் வாங்க அவசியமில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள சாட்சிகள் இருவரையும் ஒரே நேரத்தில் விசாரிக்க நான் தயாராக தான் உள்ளேன். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு நான் சொன்ன விதத்தில், சொன்ன தேதியில், சொன்ன தொகையில், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வசதியானவர் என்றும், என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ரூ.15 லட்சம் கடனாக கொடுத்தது பற்றி என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டவில்லை. நான் வருமான வரி செலுத்தும் நபரல்ல. ரூ.20,000/- க்கு மேல் கடன் கொடுத்தால் அதற்கு வருமான வரி செலுத்த வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.